# சங்க காலமக்களின் பழக்க வழக்கங்களும் இலக்கியத்தில் சாரியை அமைவின் நோக்கமும்

31

அ.பாபு, முழு நேரமுனைவர்பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,
தமிழ், கலை அறிவியல் கல்லூரி, மயிலம்604 304
Emai id :babuda93231@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் தமிழரின் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களைகளையும் காட்டும் வரலாற்று காலக் கண்ணாடியாக இன்றளவும் திகழ்கின்றன. இவ்வியலக்கியங்களே உலக மக்களுக்கு வியப்பை தரும் வண்ணம் அமைகின்றன. மனிதன் நெருப்பை கண்டு பிடிக்கும் காலத்திலே ஒரு சமூகம் எப்படி பண்பாட்டை தழுவிய சமூகமாக வளர்ந்திருக்க முடியும் என்றும். உலக மொழிகள் வளர்ந்து வரும் காலக் கட்டத்திற்க்கு முன்பாகவே ஒரு மொழியில் இலக்கணம் படைத்து இருக்க எப்படி முடியும் என்னும் வியப்பும் ஏற்படுகின்றன.இத்தகைய சிறப்பு மிக்கதமிழ் மொழியில் பண்பாட்டுக்கூறுகளையும் சாரியை அமைவின் இன்றியமையாமை பற்றி ஆய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்

**முன்னுரை**

சங்கயிலக்கியங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு இலக்கணக் கூறுகளையும் வாழ்வியல் பண்பாட்டுக்கூற்றையும் உள்ளடைக்கிய கருவுலமாக திகழ்கின்றன. இத்தகைய சிறப்பு மிக்க சங்க இலக்கியத்தில் மக்களின் பழக்கம் வழக்கம் எவ்வாறு இருந்தது என்றும் தொல்காப்பியர்கூறும் இலக்கணக்கூறான சாரியையின் தோவையை ஆய்வதே இவ்வாய்வின் தலையாய நோக்கமாகும்.

**கருச்சொற்கள்**

தீக்கடைக்கோல், ஐம்பெரும் குரவர்கள், நீல்வட்டில், நாழிகைப் பொறி

**சங்க இலக்கியங்கள் கூறும் இல்லற மாண்புகள்**

விருந்தோம்பல் பண்பினை சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் ஒவ்வொறுவரும் கடைப்பிடித்தனர். அவை இல்லத்தானின் கடமைகளாகவே கருதப்பட்டன. விழாக்காலங்காலங்களிலும் பண்டிகை நன்னாலிலும் ஏழைகளுக்கும் துறவிளுக்கும் உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டன. இல்லத்தில் வாழும் ஒவ்வெருவரும் தம் ஐம்பெரும் குரவரான பெற்றோர் , தமையன் ஆசிரியர் , அரசன், முன்னோர்கள் ஆகியோர்களை வணங்கவேண்டும். இவற்களுள் தாய் தந்தையர்களே முதன்மையானவர்கள் என்று பணியவேண்டும்.மனைவியர்களுக்கு மட்டும் தான்வழிபடும் தெய்வம் கணவன் தவிர வேரு இல்லை என்னும் அளவிற்க்கு வாழ்ந்து வந்தனர் . விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று அவர்களை நன்கு உபசரித்து அவர்கள் விரும்பிய அனைத்தையும் கொடுத்து அவர்கள் செல்லும் பொழுது ஏழடி நடந்து சென்று வழியனுப்ப வேண்டும் என்பதை

**காலி னேழடிப் பின்சென்று கோலின்**
**றாறுகளைந் தோறென் றேற்றி வீறுபெறு**

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966-ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

**பேரியாழ் முறையுழிக் கழிப்பி நீர்வாய்த்**[1]

எனும் பாடல் வரியின் மூலம் கூறுவதைக் காணலாம். மேலும் விருந்தினர் வந்தால் எழுந்து நின்று உள் அன்போடு வரவேற்க வேண்டும் . என்பதை

**இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை**
**விடுப்ப ஒழிதலோ டின்ன**[2]

இப் பாடல் வரிகளின் மூலம்கூறுவதைக் கொண்டு சங்க காலமக்கள் எவ்வாறு விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினார்கள் என்பதை இப் பாடல் வரியின் மூலம் அறியமுடிகிறது.

**சங்க கால மக்களின் பழக்க வழக்கங்கள்**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் சில பழக்க வழக்கங்களை நாள்தேறும் கடைப்பிடித்தனர். அவர்கள் அதனை முன்னோர்கள் மொழிகள் என்று கருதினாலும். தற்பொழுது அவற்றை ஆராய்து பார்த்தால் அறிவியல் தொழில்நுட்பம் பொதிந்து கிடப்பதனை அறியமுடிகிறது. அக்கால மக்கள் காக்கைக்கு உணவு அளித்தனர் தான் உணவு உண்ணும் முன் காக்கைக்கு உணவு வைக்கும் பழக்கம் இருந்தது என்பதை

**செஞ்சோற்ற பலிமாந்திய**
**கருங்காக்கை கவவுமுனையின்**[3]

எனும் பாடல்வரியின் மூலம் இவ் வழக்கம் சங்க கால மக்களிடையே காணப்பட்டதை அறியலாம். இப் பழக்கம் எப்பொழுது ஏற்பட்டது என்று தெறியவில்லை.

**நெருப்பின் பயன்பாடும் நாழிகை கண்டுபிடிப்பும்**

நெருப்பின் பயன்பாட்டை சங்க காலமக்கள் அறிந்து இருந்தனர். இடைச்சி தீக்கடைக்கோல் எனும் கோல் வைத்திருந்ததையும் சிக்கிமுக்கி கற்களைக் கொண்டு தீ உண்டாக்கினார்கள் என்றும் அத்தீயை அணைக்காமல் காக்கவும் செய்தனர் ஏனெனில் அவற்கள் நெருப்பை உண்டாக்குவது எவ்வளவு கடினம் என்பதை உணர்ந்து இருந்தனர். இதனை கடைக்கொள்ளி என்றனர் மேலும் பொழுது காண்பதற்க்கு அவர்கள் பல வித கருவிகளை பயன்படுத்தினர்.சூரியன் இருக்கும் திசை. நீல்வட்டில் நாழிகைப் பொறி, மலர்கள் புக்கும் நேரம், சேவல் கூவும் நேரம் இவற்றை கொண்டு கணக்கிட்டனர்.

**தனிமனித நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்**

தமிழர்கள் தங்களுக்குள் பல்வேறு நம்பிக்கைகளையும் மூடநம்பிகையையும் கொண்டு இருந்தனர் . அவர்கள் கனவுகளை நம்பினர். கனவு வரும் நேரத்தைப் பொருத்து அவை பலிக்கும் என்றே கருதினர். மற்றும் சில தீய நிமிர்த்தங்களைக் கொண்டு தமக்கு நேரூம் தீங்கை கணித்தார்கள் அவை.கொள்ளிக்கட்டைகள் நாற்புறம் எரிந்து விழுதல், பட்டமரம் தீப்பற்றி எரிதல், வானத்தில் பல ஞாயிறு தோன்றுதல், தீச்சகுனம் குறிக்கும் பறவை ஒலித்தல் ,பற்கழன்று தரையில் வீழ்தல் எண்ணெய் தேய்த்து குளித்தல், தன்னைத் தானே ஆடையின்றி பார்த்தல், ஆண் பன்றி மீதேறிச் செல்லுதல் ஆகியவை கனவில் தோன்றினால் அவை தீ நிமிர்த்தமாக கருதினர் இதனை

**திசைஇரு நான்கும் உற்கம் உற்க்கம்**
**பெருமரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்**[4]

புறநானுற்றுப் பாடல் வரி மூலம் அறியலாம். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் பேய்களுக்கு அஞ்சினர் அவையும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன என்றே நம்பினர்.மேலும் அவர்கள் வேப்பிலையும் வெஞ்சிறு கடுகும் அவர்களைக் பேய்களில் இருந்துக் காக்கும் என்று கருதினர்.இவ்வாறு அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வழக்கங்கள் இருந்ததை அறியலாம்.

**இலக்கியத்தில் இன் சாரியை பயின்றுவரும் முறை**

இன்சாரியை இலக்கியத்தில் இடப்பொருளிளும் உடைமைப்பொருளிளும் பெயருக்கும் வேற்றுமை உறுபுக்கும் இடையில் வரும் தன்மைக் கொண்டது.

**சான்றாக**

**கள்+இன்+மார் =கள்ளின்மார்** [5]

இன் சாரியை தனித்தும் பிற சாரியையுடன் தொடர்ந்தும் வருவதுண்டு

**சான்றாக**

**நெல்+இன்+கு= நெல்லிற்கு**[6]

இன் சாரியை இல் சாரியையின் மறுவடிவமாக கால்டுவெல் கருதுகிறார் இல் என்பது இல்லத்தைக் கூறிக்கும் இடப் பொருண்மைக்குறித்த சொல்லாகும் அதுவே பின்னர் உடைமைப்பொருள் குறித்த சொல்லாகவும் கருதப்பட்டுள்ளது. இன் சாரியை இன் என பெயர் வேற்றுமைக்கு முன்னர் இடம்பெறாது என்பது தொல்காப்பியர் கருத்து இக்கருத்து சங்கயிலக்கியத்தில் மீறப்பட்டுள்ளன

**சான்றாக**

**கற்பு+இன்+இன= கற்பினின்** [7]

**களம்+அத்து+இன்+இன்=களத்தினின்**[8]

என்பதை சான்றாக கொள்ளலாம்

புணர்ச்சியின் கண் இன் சாரியை இற்று என்று திரிந்து வருதலும் உண்டு இன் சாரியை வேற்றுமை உருபுகளின் முன் இடம்பெறும் பொழுது இணைப்புருபாக அல்லது ஒலித்துணையாக மட்டும் இடம் பெறும் தெலுங்கில் இடம் பெறும் னி ன என்ற சாரியைகளை இன் சாரியையின் திரிந்த வடிவமாக கால்டுவெல் கருதுகிறார்

**சான்றாக**

**தினிகி.இதற்க்கு .குருவன**

**இலக்கியத்தில் வற்று அற்று**

பிற்கால இலக்கண நூலார் அற்றுவை சாரியையாகவே கொண்டனர் அற்றுவை சாரியையாக கொள்வதில் தொல்காப்பியர் உடன்படுவதாகவே தோன்றுகிறது .அவை+ அற்று+ஐ= அவையற்றை என்று மாறும் என்பதில் இருந்து இக்கருத்து தெறிய வருகிறது.

எல்லாம் +அற்று+ஐ+உம்=எல்லாவற்றையும் என்று திரிய வாய்ப்புண்டு வற்று ச் சாரியையின் முன் இடம் பொரும் நிலைமொழி ஈறு கெடும் என்பது தொல்காப்பியர் விதி சங்க இலக்கியத்தில் வற்றுக்கு பதில் அற்று சாரியை இடம் பொற்றுள்ளது அச் சாரியை உறுபு புணர்ச்சியில் ஆறாம் வேற்றுமை பொருளிளும் இடம் பெறக்காணலாம்.

**சன்றாக**

**அல்+வற்று+கோடு=அவற்றுக்கோடு** [9]

**எல்லாம் +வற்று+கோடு=எல்லாவற்றுக்கோடு** [10]

**பல+வற்று+கோடு= பலவற்றுக்கோடு**[11]

**இலக்கியத்தில் அத்துச் சாரியை புணர்ச்சி**

இலக்கியத்தில் அத்து உடைமைப் பொருளிலும் இடப்பொருளிலும் வருவதை காணலாம். கன்னடத்தில் நினது நினக்கு என்னும் பொருளுடைய இடம்பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அத்து பின்னர் அது ஆ வாக திரிந்து ஆறாம் வேற்றுமை பொருள் உணர்த்தும் உருபுகளாக திரிந்திருக்க வேண்டும் என்று கால்டுவெல் கருத்து வலுவானதாக தோன்றுகிறது. இக்காலத்தில் பெயர் அத்துச் சாரியை ஏற்காமல் வேற்றுமை உருபு மட்டும் ஏற்று வருவதை காணமுடிகிறது.

**சான்று**

**மாடன் + அத்து +இன் + கு= மாடத்திற்கு**

என்பதைச் சான்றாகக் கொள்ளலாம்.

**இலக்கியத்தில் அம்சாரியை**

மரப்பெயர்கள் அம் சாரியைப் பெற்று வருவதை தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை வழக்கில் காணலாம். இச்சாரியை உருபு புணர்ச்சியின் இணைப்புருப்பாகவும் பதப் புணரச்சியில் உடைமைப்பொருள் உணர்த்துவதையும் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் அம்சாரியை உடைமைப் பொருளில் இடம்பெறுவதை காணலாம்.

சான்றாக

**ஊதை+அம்+குளிர்=ஊதையங்குளிர்**[12]

**புனல்+அம்+கல்லின்=புனலங்கள்ளின்**[13]

**வள்ளி+அம்+காடு=வள்ளியங்காடு** [14]

அம்சாரியைக்குப் பதில் இன்சாரியைப் பெற்றுவருவதை காணமுடிகிறது.

**சான்று**

**புளி+இன்+காய்=புளியங்காய்**[15]

**வேம்பு+இன்+காய்=வேம்பின்காய்**[16]

என்பதை சான்றாகக் கொள்ளலாம்.

**இலக்கியத்தில் அக்குச் சாரியை**

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் அக்குச் சாரியைகளை சங்க இலக்கியத்தில் காணமுடியவில்லை. அக்குச் சாரியை திரிந்த வடிவமாக அ அகரத்தைக் கருதுகின்றனர் உரையாசிரியர்கள்.தமிழ்பிள்ளை, தாழக்கோல் இக்கருத்தை ஏற்பன் கீழ்க்கண்டவற்றை அக்கின் திரிந்த வடிவமாகக் கொள்ளலாம்.

**சான்றாக,**

**மன்ற+அ+வேம்பு=மன்றவேம்பு (புறம் .79)**

**மன்று+அ+பெண்ணை=மன்றபெண்ணை (நற்.324)**

என்பவற்றை சான்றாக கொள்ளலாம்.

**இலக்கியத்தில் அன் சாரியை**

இலக்கியத்தில் அன்சாரியை உடைமைப்பொருளிலும் இடப்பொருளிலும் வருவதை காணமுடிகிறது.

**சான்றாக**

**அது+அன்+பண்பே=அதன்பண்பே (நற்.49 )**

**இது+அன்+இயல்பு=இதனியல்பு (புறம் பா178)**

என்ற தொடர்களில் இடம்பெறும் அன்சாரியை மேற்கூறிய கருத்தை தெளிவுறுத்தும். அன் சாரியை திரிந்த வடிவமாக இன்சாரியைக் கொள்ளலாம்.

**இலக்கியத்தில ஆன் சாரியை**

ஆன் என்னும் சாரியையானது இடப்பொருளிலும் காலப்பொருளிலும் வருவதை காணமுடிகிறது.

**சான்றாக,**

**இரவினானெ ஈத்தோன் எந்தை புறம் (376)**

இடப்பொருளை உணர்த்திய ஆன் பின்னர் கருவிப்பொருள் வேற்றுமையில் இடம்பெறுவதை காணமுடிகிறது.இவ்வாறு சாரியையானது இலக்கியத்தில் பொருள் தெளிவிற்காகவும்.பாடலின் இனிமைக்கும் சாரியை பெரும் பங்காற்றுவதை காணமுடிகிறது.

**முடிவுரை**

- பழம் பெரும் வரலாற்று சிறப்பு மிக்க தமிழ்மொழி உலக பண்பாட்டில் சிறந்த இடத்தைப் பிடித்திருக்க அத்தகு சிறப்பு மிக்க நிலைக்கு கொண்டு வந்தவை தமிழரின் பண்பாடாகும் என்பது புலனாகிறது.
- தமிழரின் ஆதிகால பண்பாட்டுக் கூறுகள் இன்றளவும் போற்றும் வண்ணம் உள்ளன
- விருந்தோம்பல் பண்பிணையும் பழக்க வழக்கம் மக்களின் மூட நம்பிக்கையும் இலக்கியத்தின் மூலம் வெளிப்படுவதை அறிய முடிகிறது.
- வேற்றுமை இலக்கண உருவாக்கத்திற்கு முன் வேற்றுமை பொருள் உணர்த்தி வந்த இச்சொற்கள் தனக்குரிய பொருளை இழக்காமல் அக்காலகட்டத்தில் சாரியைகளாக கருதப்பட்டன.
- சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட சாரியைகள் இடப்பொருளையும் உடைமைப்பொருளையும் மிகுதியும் வலியுறுத்தியுள்ளதை உணரலாம். இக்கருத்திற்கு இன், அத்து. அம், வற்று, கு, அன் ஆகிய சாரியைகள் அரண்செய்கின்றன.
- இச்சாரியைகளை திராவிட மொழிகளிலுள்ள சாரியைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்வதால் மூலதிராவிடம் பற்றிய புதிய உண்மைகள் தெரியவரும்.

**அடிக்குறிப்பு**

1.பொருநராற்றுப்படை பா .எண் 165

2.நாலடியார் பா.எண் 143

3.பொருநாற்றுப்படை பாஎண்183

4.புறம்.பாஎண் 300.5

6.நற்றிணை பா எண் 72.10

7.அகம் பா எண். 36.13

8.குறுந்தொகை பா எண்318

9.தொல் நூற்பா எண்378

10.மேலது 320

11 .மேலது 227

12.குறுந்தொகை பா எண் 197

13.புறம் பா எண்79

14.முல்லைப்பாட்டு பாஎண் 100

15.நற்றிணை பா எண் 324

16.புறம் பாஎண் 389

**துணைநூல்பட்டியல்**

1.வெங்கடசாமி நாட்டார் ந.மு — அகநானூறு தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிபகம் சென்னை - 1947

2.சாமிநாதய்யர் உ.வே — குறுந்தொகை மூன்றாம் பதிப்பு, சென்னை -1955

3.இளம்புரணர் — தொல்காப்பியம் நச்சர் உரை கழக வெளியீடு, சென்னை - 1923

4.பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் — நற்றிணை உரை பதிப்பகம், 1915

5.கோபலகிருஷ்ண மாச்சாரியர் வை.மு. — நாலடியார் பதிப்பு சென்னை - 1915